**ஜனதிரிய நிதியம் - 2013**

ஜனதிரிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கலைப்புக் கணக்கு 2009 இன் 68 ஆம் இலக்க கிராமேதய சபை நிதிய (திருத்த) அதிகாரச்சட்டத்தின் மூலம் 1982 இன் 28 ஆம் இலக்க கிராமோதய சபை நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 ஜனதிரிய நிதியத்தை கலைத்தல்**

2013 சனவரி 03 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஜனதிரிய நிதியத்தினை கலைப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரினால் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் அங்கத்தவர் ஒருவர் உட்பட மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் கலைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஜனதிரிய நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 ஜனதிரிய நிதியத்தின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தீர்த்துவைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டிடங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் விடுதி மற்றும் சமையலறை உபகரணக் கணக்குகளில் 2013 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 12,047,724 கூட்டுத்தொகையான தேறிய பெறுமதியொன்று காணப்பட்டதுடன், அச்சொத்துக்களை கலைத்தல் குழுவினால் இனங்காணப்படாமல் கலைப்புக் கணக்கிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 337,447 கூட்டுத்தொகையான பெறவேண்டிய வாடகை, மதிப்பிழந்த காசோலைகள், பாதுகாப்பு வைப்புக்கள், சில்லறைக் காசுக் கட்டுநிதி மற்றும் ஏனைய முற்பணங்கள் கணக்குகளில் காணப்பட்ட மீதி என்பவற்றை கலைப்புக் குழுவினால் தீர்வு செய்யப்படாமல் கலைப்புக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**3. கலைப்பு நட்டம்**

ஜனதிரிய நிதியத்தைக் கலைத்தமையால் ஏற்பட்ட ரூபா 12,378,084 தொகையான நட்டமானது நிதியத்தின் உரிமையாண்மைக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், உரிமையாண்மைக் கணக்கில் ரூபா 165,806,672 தொகையான மீதி திரட்டு நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.